**செய்தி வெளியீடு எண்:695** **நாள் : 24.12.2015**

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000/– உதவித்தொகை வழங்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2015–2016ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 30–லிருந்து 50–ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டு அதன்படி தற்போது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிப்பினைச் செயற்படுத்தும் பொருட்டு 2015–2016ஆம் ஆண்டுக்கு மீண்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தெரிவுசெய்யப்படும் தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000/–மும், மருத்துவப்படி ரூ.100/–ம் மற்றும் கட்டணமில்லா பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்படும். சென்னை – 600 008, தமிழ்ச் சாலை, எழும்பூர், தமிழ் வளர்ச்சி இயக்குநர் என்ற முகவரிக்கு **விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 4.1.2016.**

விண்ணப்பிக்கத் தகுதிகள்: 01.01.2015 அன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். ஆண்டு வருவாய் ரூ.36,000/–க்குள் இருக்க வேண்டும். தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான ஆதாரங்கள் மற்றும் தமிழறிஞர்கள் இரண்டு பேரிடம் தகுதிநிலைச் சான்று பெற்று இணைக்க வேண்டும். உரிய விண்ணப்பப் படிவம் நேர்முகமாகவோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.org) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**